சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

இ.பி.எண்.22/2023 ஓ.எஸ்.எண்.1158/2016

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் ம.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எம். முருகேசன் | வயது | 54 |
| த/பெ | மாதையன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பாரதி நகர், காரமடைரோடு | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | வியாபாரம் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஒரு தலை பட்ச தீர்ப்பாணையின் அடிப்படையில் தான் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். தாவா சொத்தை எப்படியாவது ஏமாற்றி வாங்கி விட வேண்டும் என்ற எண்ணத்தில் தான்ஒரு தலைபட்ச தீர்ப்பாணையின் அடிப்படையில் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. நிறைவேறுதல் மனுவில் குறிப்பிட்டு உள்ள மனுதாரரர் முகவரியும் தாவா சொத்தும் ஒன்று தானா என்றால் நினைவு இல்லை. நிறைவேறுதல் மனுவில் என்னுடைய முகவரியாக எந்த முகவரியை குறிப்பிட்டு உள்ளேன் என்றால் நினைவு இல்லை. தாவா சொத்தின் முகவரி தெரியுமா என்றால் பெள்ளாதி கிராமத்தில் உள்ளது. அந்த முகவரியில் தான் நான் குடியிருக்கிறேனா என்றால் இல்லை. மனுவில் குறிப்பிட்டு உள்ள முகவரியும், தாவா சொத்தும் ஒன்று தான் என்றும் நான் தாவா சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை. எதிர் மனுதாரர் தன் மீது பிறப்பிக்கப்பட்ட ஒரு தலை பட்ச உத்தரவை இரத்து செய்யக் கோரி இ.ம.எண்.1/2023 மற்றும் 2/2023 என்ற

மனுக்கள் தாக்கல் செய்து அந்த மனுவில் எனக்கு வந்த அழைப்பாணையை நான் திருப்பி அனுப்பி விட்டேன் என்றால் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொண்டேன். தபால் அலுவலகம் மூலமாக எனக்கு நேரடியாக எந்த அழைப்பாணையும் வரவில்லை. கோயமுத்தூர் 3 வது கூடுதல் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.33/2023 என்ற வழக்கில் 16.02.2024 அன்று நான் நேரடியாக ஆஜர் ஆனேன் என்றால் சரி தான். அன்று நான் வழக்கறிஞர் வைப்பதாக கூறினேன் என்றால் சரி தான். இ.ம.எண்கள் 1/2023 மற்றும் 2/2023 ஆகிய மனுக்கள் அனுமதிக்கப்பட்டால் இந்த நிறைவேறுதல் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றால் சரி அல்ல. எதிர் மனுதாரரின் சொத்தை எப்படியாவது ஏமாற்றி விடவேண்டும் என்ற எண்ணத்தில் தான் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. நிறைவேறுதல் மனுவை வழக்கறிஞர் வைத்து தான் நடத்தி வருகிறேனா என்றால் ஆமாம். எதிர் மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொள்ளாமல் கால தாமதம் செய்கிறேன் என்றால் சரி அல்ல. இந்த நிறைவேறுதல் மனு செல்ல தக்கது அல்ல என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா. கெங்காராஜ்.
சார்புநீதிபதி,மேட்டுப்பாளையம்.